https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# யார் இந்த பூமூட்டுக்காரர்கள்?

**ஜீ. ஜெனித் குமார்**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் ந. அருள்மொழி**
ஆய்வு நெறியாளர், இணைப்பேராசிரியர்
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி)
மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது
சிவகாசி
ORCID id : https://orcid.org/0009-0004-2650-1361

**ஆய்வுச்சுருக்கம்**

*இன்றைய நவீன காலச் சூழலில் அலைகுடிகளாக வாழ்ந்து வருகின்ற மக்கள் இயற்கை சார்ந்தும், தொன்மை மரபு வாழ்வியல் சார்ந்தும் கட்டமைக்கப்பட்ட வாழ்வியல் தளத்திலேயே வாழ்கின்றனர். உலகில் தோன்றிய பல்வேறு மனித இனங்கள் இயற்கையோடும், இயற்கை வளங்களோடும் இயைந்து வாழ்கின்றன. தாம் வாழுகின்ற நிலத்திற்கேற்ப வாழ்விடங்களை அமைத்தும், தொழில்களைச் செய்தும், கிடைத்தவற்றை உண்டும் வாழ்ந்தனர். இத்தகு வாழ்க்கைமுறை தனித்த இனக்குழு அடையாளத்தையும், இன இயல் பண்புகளையும் தோற்றுவிக்கின்றன. மேலும் பல்வேறு இனக்குழு வாழ்வியல் சூழலில் தனித்த வேறுபாடுகளும், மாறுபாடுகளும் காணப்படுகின்றன. அம்மக்களில் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டுள்ள “ஆதியன்” என்ற சமூகத்தைச் சார்ந்த பூம்பூம்மாட்டுக்காரர்களின் வாழ்வுநிலை, யார் இந்த மனிதர்கள் என்பனவற்றைக் குறித்தாய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.*

**பூமூட்டுக்காரர்கள்**

*பூம்பூம்மாட்டுக்காரர்களையே பூமூட்டுக்காரன் என்று கண்மணி குணசேகரன் குறிப்பிடுகின்றார். இவர்களை* **“பூமூட்டுக்காரன் : பெ. பூம்பூம்மாட்டுக்காரன்; என்னா பூமூட்டுக்காரன் மாதிரி துணிய வாரிப்போட்டுக்கிட்டு வர்ற?”** *(நடுநாட்டுச் சொல்லகராதி, தமிழினி, ப.199) என்று கூறுவதும் குறிக்கத்தக்கது. ‘பழங்குடி ஆதியன்’ என்ற இனக்குழு மக்கள் தமிழ்நாடு மற்றும் கேரளத்தில் ஆங்காங்கு வாழ்ந்து வருகின்றனர். இவ்வின மக்களுள் ‘பூம்பூம்மாட்டுக்காரர்கள்’ என்றழைக்கப்படுகின்ற ஒரு இனக்குழுவும் காணப்படுகின்றனர். அலங்கரிக்கப்பட்டுள்ள மாட்டினைக் கொண்டு குறி சொல்லி வித்தை காட்டும் தொழிலினைச் செய்து வருவதால் இப்பெயர் பெற்றனர். இம்மக்களின் தாய்மொழி தெலுங்கும், தமிழுமாம். தெலுங்கு மொழியினை அவர்களது சமூகத்திற்குள்ளும், தமிழ்மொழியினைப் பொது சமூகத்திற்குள்ளும் பேசுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். தனித்துவமான பண்பாடு, கலாச்சாரம், சமய வாழ்வியல் முறைகளை உடையவர்களாவர். கடவுளின் பெருமைகளைப் பற்றிக் கூறுவதையே தொடர் பணியாகச் செய்து வருகின்றனர். விருப்பத் தெய்வத்தின் பெருமைகளை வீடுகள்*

தோறும் பூம்பூம்மாடுகளை அலங்கரித்து நாமம் போட்டுத் தானும் நாமமிட்டு, நாதஸ்வரம் மற்றும் உருமியோடு குறி சொல்லியும் கடவுள் நாமத்தைப் பரவலாக்கம் செய்தும் வருகின்றனர்.

### இறையாகப் பெற்ற கால்நடைகள் (பூம்பூம்மாடு)

அனைத்துச் சமூக மக்களும் குறிப்பாக வேளாண் சமூக மக்கள், தங்கள் குடும்ப நன்மைக்காகவும், வேளாண் பொருள் உற்பத்தி மற்றும் பாதுகாப்பு மேன்மைக்காக வும் இறைவனை வேண்டித், தங்கள் சமூகத்தின் தொழில் பிரதான கருவியான கால்நடைகளை அவரவர் விருப்பத் தெய்வங் களான இறைவனை வணங்கி நேர்ந்து விடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். தங்கள் கால்நடைகளை விருப்பத் தெய்வங்களுக்கு நேர்ந்து விடுவதற்கு முன்பு 'சாங்கியம்' சடங்கினை மேற்கொள்வர். ஆதியின மக்களில் தங்களுக்கு அறிந்த பூம்பூம் மாட்டுக்காரர் களை அழைத்து, தங்களது குடும்பத்தில் இருந்து நேர்ந்து விடப்படுகின்ற கால்நடையை முடியால் ஆன கருப்புக் கயிறு ஒன்றினைக் கட்டி, சடங்கு செய்து வழிபடுவர். இந்தச் சடங்கிற்குச் 'சூலம் போடுதல்' என்று பெயர். அவ்வாறு சூலம் போடப்பட்ட கால்நடை யைத் தங்கள் வேண்டுதல் நிறைவேறியவுடன் தங்களுடைய விருப்பத் தெய்வத்திடம் ஒப்படைப்பதாகக் கருதி சூலம் போட்ட ஆதியின மக்களாகிய பூம்பூம்மாட்டுக்காரர் களிடம் தட்சணை மற்றும் வழிபாட்டுப் பொருட்களுடன் சூலம் போட்ட கால்நடையான காளை மாட்டினை ஒப்படைப்பார்கள். அந்தக் காளை மாட்டினைப் பெற்றுக் கொண்ட பூம்பூம்மாட்டுக்காரர், அவர்களையும் அவர்களது குடும்பத்தினையும் வாழ்த்தி, அவர்கள் குடும்பம் நலம்பெற இறைவனை வேண்டிச் செல்வார்கள்.

அலைந்து திரிந்து வாழ்வினைத் தேடிப் புலம் பெயர்ந்து வந்த ஆதியின மக்களின் முன்னோர்கள் விவசாயத் தொழிலையே செய்து வந்தனர். மழையின்மை. பஞ்சம், பசியின் காரணமாகப் பிறரிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். கை, கால்கள் நன்றாக இருந்தும் பிறரிடம் கையேந்தினால் எவரும் பணமோ, உணவோ கொடுக்க மாட்டார்கள் என்றறிந்து இறைவனுடைய பெயரால் இறையாகப் பெற்ற மாட்டினை, பூம்பூம் மாட்டுக்காரர்கள் உயிர்ப் பலியிடாமல் மேய்த்து வளர்த்து வருகின்றனர். பிற்காலத் தில் அந்த மாடுகளை நன்கு பழக்கப் படுத்தி பயிற்சி கொடுத்து அலங்கரிக்கப் பட்டு ஓட்டிச் சென்று குறி சொல்வது, பாட்டுப் பாடுவது, மங்கல வாழ்த்துச் சொல்வது போன்ற வேலைகளைச் செய்து வந்தனர். வலிமையான அந்த மாட்டின் முதுகில் வண்ண வண்ணத் துணிகள், சீவிய கொம்புகள், கழுத்து, நெற்றி என எங்கும் அலங்காரம் செய்யப்பட்டுக் கம்பீரமான தோற்றத்தில் வரும். அம்மாட்டினைப் பிடித்து வருகின்ற பூம்பூம்மாட்டுக்காரரும் கண்ணைக் கவரும் நிறத்திலான வேட்டியி லும், சட்டையிலும் வெற்றிலையைக் குதப்பிய வாயோடு தனது தோளில் தொங்க விட்டிருக்கும் உருமி மேளத்தைக் கையில் வைத்திருக்கும் குச்சியால் தேய்த்து 'உர்ருங்.. உர்ருங்..' என ஒலியெழுப்புவார். அந்த ஒலிக்கேற்றவாறு பூம்பூம்மாடு தலையை அசைக்கும். கிராமத்துக் குழந்தைகள் அம்மாட்டின் பின்னால் திரண்டு செல்வார்கள்.

தெருக்கள் தோறும் சென்று வீட்டின் முன்பு பூம்பூம்மாட்டினை நிறுத்தி,

**'அம்மா மக்களப் பெத்த மவராசி**

**புள்ளைகளைப் பெத்த புண்ணியவதி**

**வாங்கம்மா வெளிய, தங்கேஸ்வரி *(மாட்டிற்கு இவர்கள் வைத்தபெயர்)***

வந்திருக்கு, என்று பாடுகின்றார்.

வீட்டின் மக்கள் வெளியே வந்தவுடன்

**'கைப்பித்து, கால்பித்து,**

**பருவக்காற்று, பத்து இருக்கிறவுக, உங்க**

**வீட்டுல இருக்கிற மொளகு, உப்பு**

**11 ரூவா காணிக்கையைக் கொண்டு வந்து**

**இந்தத் தங்கேஸ்வரி நெத்தியில முடிச்சா**

**உங்க உடம்புல இருக்கிற பருவு, பத்து**

**பிணி தீரும் சாமி.'** (தகவலாளர் : ர. விஜய், பூம்பூம்மாட்டுக்காரர், மதுரை.)

எனக் கூறிக் குறி சொல்கின்றனர்.

"இந்த வீட்டு மகராசி நமக்கு அரிசி போடுவாங்களா" என பூம்பூம்மாட்டுக் காரர் மாட்டிடம் கேட்பார். அந்த மாடு "ஆமாம்" எனச் சொல்வது போலத் தலையை ஆட்டும். "இந்த வீட்டுக்கு நல்ல சேதி வரப் போகுதா" என மாட்டுக்காரர் கேட்க அந்தக் கேள்விக்கும் மாடு தலையை அசைக்கும். அந்த வீட்டு மக்கள் காணிக்கையாக அரிசியோ, பருப்போ, பணமோ கொடுப்பார். அதை வாங்கியவுடன், "இந்த மகராசி வீட்டுக்குத் தீராத வினையெல்லாம் தீரனும், மாறாத பகையெல்லாம் ஓடனும்." "கொம்பால தட்டி நன்றி சொல்லி வாடா" என மாட்டுக்காரர் சொல்லி உருமி மேளத்தைத் தேய்க்க பூம்பூம்மாடு அந்த சீவிய வண்ண நிறக்கொம்பினை அவ்வீட்டு மக்களிடம் தலைகுனிந்து அசைத்துக் கொம்பினால் அவர்களைத் தொடுவது, அம்மக்களுக்கு நன்றி சொல்வது போலக் காணப்படும்.

உருமியுடன் கூடிய அவர்களது மொழி நடை கேட்கும் மக்களுக்கு ரசனையாகக் காணப் படுகின்றன. அந்த வீட்டிலுள்ள வர்கள் மாட்டின் வழியே இறைவனே வந்து நமக்கு நல்லவழி காட்டுவதாக எண்ணி மகிழ்வார்கள்.

## நிறைவுரை

இன்றைய நவீன காலகட்டத்தில், நாளுக்கு நாள் நாட்டின் வளர்ச்சியும், மக்களின் புதிய வகை சிந்தனைகளும், தொழில் முறைகளும், விஞ்ஞானமும், அறிவியல், இயந்திரம், கலாச்சாரம் என அனைத்தும் வளர்ச்சியடைந்து கொண்டே செல்கின்றன. ஆனால் அலைகுடி மக்களான பூம்பூம் மாட்டுக்காரர் கள் வாழ்க்கை நிலையோ நாளுக்கு நாள் சரிவடைந்த நிலையில் அழிவுப்பாதையை நோக்கியே செல்கின்றது. அந்தக்காலத்தில் கிராமத்துத் தெருக்களில் பூம்பூம்மாடு நுழைந்து விட்டாலே குழந்தைகளுக்கு ஒரே கொண்டாட்டம் தான். ஆனால் இன்றைய குழந்தைகளுக்கு பூம்பூம்மாடு பற்றி அறியும் வாய்ப்பே குறைந்து விட்டது. நம் தமிழ்ச் சமூக மரபில், அதன் பண்பாட்டு அசைவில் முக்கிய அங்கம் வகித்திருந்த இக்குறி சொல்லி மாடுகள் இன்றைக்கு எங்கேயிருக் கின்றன என்றும் தேடிப்பார்க்க வேண்டிய தாயிருக்கிறது. அந்தமாடுகள் மட்டுமன்றி அவற்றைப் பழக்கப்படுத்தி மக்களை மகிழ்ச்சிப்படுத்திய பூம்பூம் மாட்டுக்காரக் குடும்பங்களின் வாழ்வு நிலை மிகத் தாழ்ந்தே காணப்படுகின்றது. நாளுக்கு நாள் அவர்களது வாழ்வுநிலை கேள்விக்குறியானால், நம் பாரம்பரியக் கலை, கலாச்சார மொழிநடை போன்ற பண்பாட்டுக் கூறுகளும் அழிந்து கொண்டே செல்லும். அந்த வகையில் அவர்களை அவ்வழியில் இருந்து மீட்டெடுத்துப் பண்பாட்டுக் கலாச்சாரத் தைக் காப்பது நம் ஒவ்வொருவரின் கடமை என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

## துணை நின்றவை

1. கண்மணி குணசேகரன், நடுநாட்டுச் சொல்லகராதி, தமிழினி பதிப்பகம், சென்னை.
2. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.
3. களஆய்வுத் தகவலாளர் : ர. விஜய், பூம்பூம்மாட்டுக்காரர், மதுரை.